MAALAI MALAR 17 AUG 09

## பள்ளி மாணவ, மாணவிகளுக்கு

# கல்வியுடன் கலாசாரத்தையும் கற்பிக்க வேண்டும்

## சத்குரு ஜக்கி வாசுதேவ் பேச்சு

நாகர்கோவில், ஆக.17–

நாகர்கோவில் அருகே கொரண்டியில் ஈஷா வித்யா ஊரக பள்ளிஉள்ளது. இந்த பள்ளியில் 386 மாணவ, மாணவிகள் கல்வி கற்று வருகினற்னர்.

இதில் 197 மாணவர்களுக்க கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி இன்று நடந்தது. விழாவில் ஈஷா அறக்கட்டளை தலைவர் சத்குரு ஜக்கி வாசுதேவ் கலந்து கொண்டு மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகையை பள்ளி முதல்வர் ஷைலாகுமாரியிடம் வழங்கினார். பின்னர் சத்குரு ஜக்கி வாசுதேவ் பேசியதாவது:–

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு கல்வியுடன் கலாச்சாரத்தையும் கற்பிக்க வேண்டும். அதற்காகத்தான் ஈஷா அறக்கட்டளை சார்பில் ஊரகப் பள்ளிகள் தொடங்கப்பட்டது. விரைவில் தமிழகம் முழுவதும் இந்த பள்ளிகள் தொடங்கப்பட்டும். இங்கு மாணவர்களுக்கு கல்வியுடன் நமது கலாச்சாரத்தையும் கற்று கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.